**செய்தி வெளியீடு எண்: 146** **நாள்: 21.02.2019**

# <u>செய்தி வெளியீடு</u>

வரவிருக்கும் மக்களவைப் பொதுத் தேர்தல், 2019–ஐ முன்னிட்டு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் விடுபட்டுப் போனவர்களுக்கு பெயர் சேர்த்துக் கொள்ள மேலும் ஒரு வாய்ப்பு அளிப்பதற்காக, 23–02–2019 (சனிக்கிழமை) மற்றும் 24–02–2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய இரு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பள்ளிகளில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகள்) சிறப்பு முகாம்கள் நடத்தப்பட வேண்டுமென்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இம்முகாம்களில் பெயர் சேர்த்தல்/ நீக்கல்/ திருத்தல் / தொகுதிக்குள்ளேயே இடமாறுதல் ஆகியவற்றுக்கான படிவங்கள் பெறப்படும்.

படிவங்களின் விவரம் பின்வருமாறு

| வரிசை எண் | படிவம் | |
|---|---|---|
| 1. | படிவம் 6 | பெயர் சேர்க்க |
| 2. | படிவம் 7 | பெயர் நீக்க |
| 3. | படிவம் 8 | விவரங்களைத் திருத்த |
| 4. | படிவம் 8எ | தொகுதிக்குள்ளேயே முகவரி மாற்றம் செய்ய |

காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இந்த அமைவிடங்களில் அலுவலர்கள் நிரப்பப்பட்ட படிவங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

2. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைமைத் தேர்தல் அதிகாரி,**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**